# பகுதி VII

# 23. சட்டம் சாரா அமைப்புகள்

## Non-Constitutional Bodies

*ஐக்கிய நாடுகளின் (UNO) மனித உரிமைகள் பிரகடனம் மக்களிடையே சமத்துவத்தை உறுதி செய்கிறது.*

*- எஸ்.ஆர். மகேஸ்வரி*

## 23.1 நிதி ஆயோக் (NITI Aayog)

### 23.1.1 நிதி ஆயோக் என்றால் என்ன?

நிதி ஆயோக் என்றால் இந்தியாவை மாற்றும் தேசிய நிறுவன சிந்தனைக் களம் (National Institution for Transforming India Aayog) என்று பொருள். இது சமஸ்கிருதத்தில் ராஷ்ட்ரீய பரிவர்த்தன் சான்ஸ்தா என்று கூறப்படுகிறது.

### 23.1.2 நோக்கம்

நிதி ஆயோக்கின் அடிப்படை நோக்கம் நாட்டின் பொருளாதார முடிவெடுப்பதில் மாநில அரசுகளை ஈடுபடுத்தவும், பங்கேற்கச் செய்யவும் ஊக்கம் அளிப்பதாகும். மேலும் திட்டமிடும்போது கீழிருந்து - மேல் அணுகுமுறையை (Bottom - Up Approach)ப் பின்பற்றுவது சிறப்பு நோக்கமாகும். அதுமட்டுமல்ல நிதி ஆயோக் மூலம் இந்தியாவில் கூட்டுறவு போட்டி கூட்டாட்சி (Co-operative Competitive Federation) யை ஏற்படுத்துவது இந்நிறுவனத்தின் கட்டளையாகக் கருதப்படுகிறது. சுருங்கக்கூறின் மாநில அரசாங்கங்கள் மற்றும் ஒன்றியப் பகுதிகளின் (Union Territories) பொருளாதாரப் பிரதிநித்துவத்துக்கான அமைப்பே நிதி ஆயோக் ஆகும்.

### 23.1.3 துணைக் குழுக்கள்

இதற்காக பின்வரும் 3 முக்கிய விவகாரங்களைக் கவனிக்க முதலமைச்சர்களைக் கொண்ட 3 துணைக் குழுக்களை அமைத்துள்ளார் பிரதமர் மோடி.

1. மத்திய அரசின் திட்டங்கள்
   (Centrally Sponsored Schemes)
2. திறமை மேம்பாடு
   (Skill Development)



3. பாரத தூய்மைத் திட்டம்
   (Swachh Bharat)

### 23.1.4 நிதி ஆயோக்கின் அமைப்பு

(Formation of NITI Aayog)

2015 ஜனவரி முதல் தேதி மத்திய அரசாங்கம் நிதி ஆயோக் அமைக்கப்பட்டதைப் பற்றிய அறிவிப்பை வெளியிட்டது. அதன் முதல் கூட்டம் 2015 பிப்ரவரி 8 ஆம் தேதி பிரதமர் மோடியின் தலைமையில் நடைபெற்றது. நிதி ஆயோக்கின் உறுப்பினர்கள்:

1. பிரதமர் தலைவர். 2. ஆட்சி மன்றத்தில் முதலமைச்சர்கள், சட்ட மன்றங்கள் உள்ள ஒன்றியப் பகுதிகளின் முதலமைச்சர்கள் மற்றும் ஒன்றியப் பகுதிகளின் துணைநிலை ஆளுநர்கள் (Lieutenant Governors). 3. ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் கல்விப் பிராந்தியங்கள் சம்மந்தப்பட்ட விவகாரங்களைக் கவனிக்க பிராந்திய மன்றங்கள் (Regional Councils) அமைக்கப்படும். இம்மன்றங்கள் பிரதமரால் கூட்டப் படும். 4. வல்லுநர்கள், துறை நிபுணர்கள், கள அனுபவமுடையோர் சிறப்பு அழைப்பாளர்களாவர்.

5. நிதி ஆயோக்கின் முழுநேர உறுப்பினர்கள்: I. துணைத் தலைவர் : தற்போது அர்விந்த் பனகாரியா. II. உறுப்பினர்கள்: பிபேக் தேப்ராய், வி.கே. சரஸ்வத், பேராசிரியர் ரமேஷ் சந்த். III. பகுதி நேர உறுப்பினர்கள்: முன்னணி பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிக் கூடங்களில் பணிபுரிவோர் இருவருக்கு மேற்படாமல். இவர்கள் சுழற்சி முறையில் நியமிக்கப்படுவர். IV. பிரதமரால் நியமிக்கப்படும் 4 அமைச்சர்கள். V. பிரதமரால் நியமிக்கப்படும் முதன்மை தலைமை நிர்வாக அதிகாரி (Chief Executive Officer - CEO) இவர் மத்திய அரசின் செயலர் பதவிக்கு இணையாவார். அமிதாப் காண்ட் முதல் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டார். 6. செயலகம்.

### 23.1.5 நிதி ஆயோக் - திட்ட ஆணையம் : வேறுபாடு

(Difference Between NITI Aayog and Planning Commission)

| வ.எண். | நிதி ஆயோக் | திட்ட ஆணையம் |
|---|---|---|
| 1. | ஆலோசனை மன்றம் நிதி அமைச்சகத்திடம் நிதி ஒதுக்கும் அதிகாரம் | அமைச்சகங்களுக்கும் மாநிலங்களுக்கும் நிதி ஒதுக்கல். |

| | | |
|---|---|---|
| 2. | 3 முழு நேர உறுப்பினர்கள் | 8 முழு நேர உறுப்பினர்கள் |
| 3. | அனைத்து முதலமைச்சர்கள் துணை நிலை ஆளுநர்கள் மட்டும் | தேசிய வளர்ச்சி மன்றத்தில் மாநிலங்களின் பங்கு. |
| 4. | பிரதமரால் நியமிக்கப்படும் தலைமை நிர்வாக அதிகாரி | அரசாங்க செயலர்கள் |
| 5. | தேவைக்கேற்ப பகுதிநேர உறுப்பினர்கள் | பகுதிநேர உறுப்பினர்கள் இல்லை |
| 6. | ஆட்சி மன்றம் | திட்ட ஆணையம் முதலமைச்சர்கள் மற்றும் துணைநிலை ஆளுநர்களைக் கொண்ட தேசிய வளர்ச்சி மன்றத்துக்குப் பொறுப்பு. |
| 7. | தலைமை நிர்வாக அதிகாரி, துணைத் தலைவர், முழுநேர பகுதிநேர உறுப்பினர்கள், நான்கு அமைச்சரவைக் குழு அமைச்சர்கள் | துணைத் தலைவர், உறுப்பினர் செயலர் முழுநேர உறுப்பினர்கள் |
| 8. | நிதி ஒதுக்குவதற்குமுன் மாநிலங்களைக் கலந்து ஆலோசித்தல் | நிதி ஒதுக்கிய பின் மாநிலங்களைக் கலந்து ஆலோசித்தல் |
| 9. | நிதி ஒதுக்கும் அதிகாரம் இல்லை. | நிதி ஒதுக்கும் அதிகாரம் |
| 10. | சிந்தனைத் தளம் | செயல் தளம் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்தல் |



### 23.1.6 மதிப்பீடு

பிரதமர் மோடி அரசு கடந்த **65** ஆண்டுகளாக செயல்பட்டு வந்த திட்ட ஆணையத்துக்கு பதிலாக நிதி ஆயோக்கை அறிமுகப்படுத்தியுள்ளது. கூட்டுறவு போட்டிக் கூட்டாட்சியை இலக்காகக் கொண்டு இப்புதிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாநிலங்களை மையப்படுத்தி நிதி ஆயோக் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பிரதமர் மோடி மேற்கொண்டுள்ள இந்த முயற்சியைப் பிரதான எதிர்க்கட்சிகள் கடுமையாகக் குறை கூறியுள்ளன. அக்குறைகளில் முக்கியமானவை:

**1.** ஜவகர்ஹால் நேரு கொண்டு வந்தார் என்பதற்காக இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது அரசியல் காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடாகும். **2.** பெயரை மாற்றிவிடுவதால் விரும்பும் விளைவுகளைப் பெற முடியாது. **3.** இது ஒரு கவர்ச்சி உத்தி (Gimmickry) யேயன்றி வேறெதுவுமில்லை. **4.** அதிகாரம் பரவலாக்கப்படுவதற்கு பதிலாக பிரதமர் மற்றும் நிதி அமைச்சகத்தில் குவிக்கப்பட்டுள்ளது. **5.** அதிகாரவர்க்கம் தொடர்ந்து அதன் வழியிலேயே செல்லும். **6.** கிராமங்களின் பூரண பங்கேற்பின்றி எந்த புதிய முயற்சியும் வெற்றி பெறாது. திட்டமிடல் தவிர்க்க முடியாதது. திட்டமிடப்படாத செயல்பாடு செல்ல வேண்டிய இடம் தெரியாமல் மேற்கொள்ளப்படும் பயணத்தைப் போன்றது. மரம் கனிகளால் அறியப்படுவதைப் போன்று நிதி ஆயோக்கின் வெற்றி அதன் விளைவுகளால் தெரியப்படும்.

## 23.2 தேசிய மனித உரிமைகள் ஆணையம்

(National Human Rights Commission)

### 23.2.1 மனிதனே முக்கியம்

மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டும். மனித மதிப்பு மதிக்கப்பட வேண்டும். மனித மரியாதை வணக்கத்துக்குரியது. மனித உரிமைகள் உடன் பிறந்தவை. பறிக்கப்பட முடியாதவை. அதனால்தான் பன்னாட்டு அமைப்புகள், குறிப்பாக ஐக்கிய நாடுகள் அவை (U.N.O) அதன் பட்டயத்தின் முதல் சரத்திலேயே (Article I of the U.N. Charter) **"மனித உரிமைகளை உலக நாடுகள் ஊக்குவித்துப் பாதுகாக்க வேண்டும். மனித உரிமைகள் இன, மத, மொழி கடந்தவை"** என்று வலியுறுத்துகிறது. *1948* டிசம்பர் *10*ஆம் தேதி ஐக்கிய நாடுகள் பொது அவை (U.N. General Assembly) மனித

உரிமைகள் பிரகடனம் (Declaration of Human Rights) செய்தது. 'மனிதனே முக்கியம்' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இப்பிரகடனம் செய்யப்பட்டது.

### 23.2.2 அடிப்படை உரிமைகள்

இந்தியா ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகள் பிரகடனத்தை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டது. அது மட்டு மல்ல. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பல சரத்துக்களில் *(14, 15, 16, 19, 21, 23, 24, 25-30)* இந்த உரிமைகள் இடம் பெற்றுள்ளன. வழிகாட்டு விதிகள் (Directive Principles) சமூக பொருளாதார உரிமைகள் வழங்கப்பட வேண்டியதன் இன்றியமை யாமையை அடிக்கோடிட்டுக் காட்டியது. பல மனித உரிமைகள் சார்ந்த சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

### 23.2.3 மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993

இச்சட்டம் (Protection of Human Rights Act, 1993) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஆரம்பிக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தது. இச்சட்டத்தில் இந்த ஆணையத்தின் நோக்கங்கள் தெளிவு படுத்தப்பட்டுள்ளன: 1. மனித உரிமைகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களை பலப்படுத்தல். 2. மனித உரிமை மீறல்களை செயல் சுதந்திரத்தோடு பரிசீலித்தல். 3. மனித உரிமைகளை நிலைநாட்டும் முயற்சிகளுக்குத் துணையாக இருந்து பாதுகாத்துப் பலப்படுத்தல்.

### 23.2.4 மத்திய மாநில மனித உரிமைகள் ஆணையங்கள்

தேசிய உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993 செப்டம்பர் 28ஆம் தேதி வெளியிடப்பட்ட அவசரச் சட்டத்தின் (Ordinance) மூலம் துவக்கப்பட்டது. அதன்பின் நாடாளுமன்றம் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றியது. இச்சட்டம் 1994லிருந்து நடைமுறைக்கு வந்தது. இந்த சட்டத்தை மத்திய அரசும் மாநில அரசுகளும் மனித உரிமைகள் ஆணையத்தை அமைக்க வழி வகுத்தது.

### 23.2.5 ஆணையத்தின் அமைப்பு

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தில் தலைவரும் (Chairman) 4 உறுப்பினர்களும் உள்ளனர். இவர்கள் அனைவரும் முழு நேரப் பணியாளர்கள். இவர்களன்றி தேசிய சிறுபான்மையினர் ஆணையம், தேசிய பட்டியல் வகுப்பார் ஆணையம், தேசிய பெண்கள் ஆணையத்தின் தலைவர்களும் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக கருதப்படுவர்.

தேசிய மனித உரிமைகள் ஆணையம் பல உறுப்பினர் அமைப்பாகும். இவ்வாறு அமைக்கப்படுவதற்குக் காரணம் அதன் செயல் சுதந்திரத்தையும், நடுநிலையையும் காப்பாற்றுவதற்கே யாகும். 5 உறுப்பினர்களைக் கொண்ட இந்த ஆணையத்தின் 3 உறுப்பினர்கள் உயர்நிலை நீதிமன்ற அனுபவம் உடையவராக இருக்க வேண்டும். ஆணையத் தலைவர் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகவும், பிற உறுப்பினர்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகளாகவோ அல்லது உயர்நீதிமன்ற நீதிபதிகளாகவோ இருத்தல் வேண்டும். இவர்கள் ஓய்வு பெற்ற நீதிபதிகளாகவும் இருக்கலாம். இவர்களில் இருவருக்கு மனித உரிமைகள் பற்றிய ஆழ்ந்த புலமையோ அல்லது நடைமுறை அனுபவமோ இருக்க வேண்டியது இன்றியமையாதது.



### 23.2.6 உறுப்பினர்கள் நியமனம்

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவரும் பிற உறுப்பினர்களும் 6 பேர் அடங்கிய குழுவின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். இந்த அலுவலர் தேர்வுக் குழுவில் 1. பிரதமர் (தலைவர்); 2. நாடாளுமன்ற மக்களவைத்தலைவர்; 3. மாநிலங்களவைத் துணைத்தலைவர்; 4. நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சித்தலைவர்; 5. மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர்; 6. மத்திய உள்துறை அமைச்சர் ஆகியோர் உள்ளனர். நியமன உறுப்பினர்கள் 5 ஆண்டுகள் அல்லது 70 ஆண்டுகள் நிறைவடையும்வரை பதவியில் இருக்கலாம். இவர்களைப் பதவி நீக்கம் செய்வதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. மனித உரிமைகள் ஆணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் ஊதியமும் சலுகைகளும் மத்திய அரசால் நிர்ணயிக்கப்படுகின்றன. இவை யாவும் இந்த ஆணையம் செயல் சுதந்திரத்தோடும், நடுநிலை தவறாமலும், விருப்பு வெறுப்பின்றிப் பணியாற்றுவதையும் குவிமையமாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டுள்ளன.

### 23.2.7 பணிகளும் பொறுப்புகளும்

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் பிரதான பணிகளாவன: 1. மனித உரிமை மீறல்கள் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கை

களில் குறுக்கிடலாம். 2. பொதுப் பணியாளர் மனித உரிமைகளை மீறினாலோ அல்லது அத்தகைய மீறல்களைத் தடுக்கத் தவறி னாலோ விசாரிக்கலாம். 3. மனித உரிமை மீறல் பற்றி நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் வழக்குகள் பற்றி விசாரிக்கலாம். 4. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்புகளை மறுசீராய்வு செய்து அவை எவ்வாறு திறம்பட செயல்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றிய பரிந்துரைகளைச் செய்யலாம். 5. பயங்கரவாதம் உள்ளிட்ட காரணிகளால் மனித உரிமைகளைப் பயன்படுத்த முடியாவிட்டால் அவற்றைப் பரிசிலித்து பரிந்துரைக் கலாம்.

6. மாநில அரசின் அனுமதியோடு எந்த சிறைச்சாலைக்கும் சென்று அங்குள்ளோரின் வாழ்க்கை நிலையைக் கண்டறிந்து பரிந்துரைகள் செய்யலாம். 7. மனித உரிமைகள் பற்றிய ஆய்வு களை மேற்கொள்ளலாம். 8. மனித உரிமைகளுக்காகப் பாடுபடும் அரசுசாரா அமைப்புகளை ஊக்குவிக்கலாம். 9. மனித உரிமைகள் பற்றிய பன்னாட்டு உடன்படிக்கைகளை ஆய்வு செய்து அவற்றை மேலும் திறமையாகச் செயல்படுத்தலாம் என்பது பற்றிய சிபாரிசுகளைச் செய்யலாம். 10. யாவற்றுக்கும் மேலாக தானே முன்வந்தோ (suosmotu) அல்லது விண்ணப்பத்தின் பேரிலோ நடவடிக்கை எடுக்கலாம். மக்களிடையே மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

## 23.2.8 செயல்பாடு

தேசிய மனித உரிமைகள் ஆணையம் செயல் சுதந்திரத்தோடு செயல்படுவதற்கான கட்டுமான வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன. 1. இதற்கு சிவில் நீதிமன்றங்களுக்கான அனைத்து அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 2. மனித உரிமைகள் மீறல் பற்றி விசாரிப்பதற்காக புலனாய்வு அதிகாரிகள் உள்ளனர். 3. இந்த ஆணையத்துக்கு மத்திய மாநில புலனாய்வுத் துறை அல்லது அதிகாரிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். 4. மனித உரிமைகள் மீறல் பற்றி விசாரணைக்குத் தேவையான தகவல்களையோ அல்லது அறிக்கைகளையோ மத்திய மாநில அரசுகளிடமிருந்து கேட்டுப் பெறலாம். 5. அரசுப் பணியாளர்கள் மனித உரிமை மீறல் செய்தாலோ அல்லது மனித உரிமை மீறல்களைத் தடுப்பதில் மெத்தனமாக இருந்தாலோ அவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மத்திய மாநில அரசுகளுக்குப் பரிந்துரைக்கலாம். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்கு



மாறு சிபாரிசு செய்யலாம். 6. மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்குத் தேவையான உத்தரவுகளையோ, ஆணை களையோ அல்லது அறிவுறுத்தல்களையோ பெற உச்சநீதி மன்றம் அல்லது உயர்நீதி மன்றங்களை அணுகலாம்.

## 23.2.9 சிறப்பான சாதனைகள்

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் சாதனைகள் சிறப்பானவை. இந்த ஆணையம் மேற்கொண்ட திட்டங்களில் குறிப்பிடத்தக்கவை: 1. 1929ஆம் ஆண்டு குழந்தைகள் திருமண தடைச் சட்டத்தை மறுசீராய்வு செய்தது. அரசுகளுக்கிடையேயான குழந்தை உரிமைகள் சம்பந்தப்பட்ட விதிமுறைகளை ஒழுங்கு படுத்தியது. அரசுப் பணியாளர்கள் சிறார்களை வேலையில் அமர்த்துவதைத் தடை செய்தது. குழந்தைத் தொழிலாளர்களைக் காப்பதற்காக மேற்கொண்ட முயற்சிகள். 2. பெண்களுக்குப் பாலியல் தொல்லைகள் கொடுப்பது; பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது; பெண்களுக்கெதிரான பாலியல் வன்கொடுமைகள் போன்றவற்றுக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

3. மனித மலத்தை மனிதன் சுமக்கும் முறையைத் தடை செய்தது. 4. பட்டியலிடப்பட்ட வகுப்பாரை மனித உரிமைகள் மீறல்களிலிருந்து காப்பாற்றுவதற்காகவும் அவர்களது பிரச்னை களைத் தீர்ப்பதற்காகவும் எடுத்த நடவடிக்கைகள். 5. 1999இல் ஒடிசாவிலும் 2001இல் குஜராத்திலும் நிகழ்ந்த இயற்கைச் சீற்ற சீரழிவுகளால் பாதிக்கப்பட்டோருக்கு துயர் துடைப்பு நடவடிக்கைகள். 6. மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளை நிலை நாட்டுவதற்காக மேற்கொண்ட முயற்சிகள். தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தற்போதைய தலைவர் உச்சநீதிமன்ற நீதிபதி எச்.எல். தத் (29 பிப்ரவரி 2016).

## 23.2.10 மதிப்பீடு

1993இல் அமைக்கப்பட்டு 1994இல் நடைமுறைக்கு வந்த தேசிய மனித உரிமைகள் ஆணையம் சமகால இந்தியாவின் அரிய சாதனையாகும். வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும். இந்த ஆணை யத்தின் செயல்பாடுகளால் மக்களிடையே மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வும், மனப்பான்மையில் மாற்றமும், மனித உரிமைகளுக்காகப் பாடுபடுவோரிடையே எழுச்சியும் ஏற்பட் டுள்ளது. இந்த ஆணையத்தின் சாதனைகள் பெருமைக்குரியவை.

தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஆலோசனை அமைப்பாக மட்டும் இருப்பதால் இது பல்லில்லாப் புலியாகச் சித்தரிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக நிரூபிக்கப்பட்ட மனித உரிமைகள் குற்றவாளிகளைத் தண்டிக்க முடியாது. குறிப்பாக மனித மீறல்களில் ஈடுபடும் இராணுவ வீரர்கள் இந்த ஆணையத்தின் கட்டுப்பாட்டுக்கு வெளியே உள்ளனர். எனினும் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் பரிந்துரைகளை மத்திய - மாநில அரசுகளால் புறக்கணிக்க முடியாது. சுருங்கக் கூறின் இந்த ஆணையத்தின் பங்கு சிறிதாயினும் பங்களிப்பு பெரிது.

### 23.2.11 தேசிய மனித உரிமைகள் ஆணையம்
(National Human Rights Commission)

**ஆணையர்கள் பட்டியல்**

| வ.எண். | பெயர் | பதவிக்காலம் |
|---|---|---|
| 1. | நீதிபதி ரங்கநாத மிஸ்ரா | 1993 - 1996 |
| 2. | நீதிபதி எம்.என். வெங்கடாசலய்யா | 1996 - 1999 |
| 3. | நீதிபதி ஜே.எஸ். வர்மா | 1999 - 2003 |
| 4. | நீதிபதி எ.எஸ். ஆனந் | 2003 - 2006 |
| 5. | நீதிபதி எஸ். ராஜேந்திர பாபு | 2007 - 2009 |
| 6. | நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன் | 2010 - 2015 |
| 7. | நீதிபதி எச்.எல். தத் | 2016 - |

## 23.3 மாநில மனித உரிமைகள் ஆணையங்கள்
(State Human Rights Commissions)

### 23.3.1 பிற மாநிலங்களில்

மாநில மனித உரிமைகள் ஆணையம் மத்திய மனித உரிமைகள், 1994 சட்ட (Central Act 10 of 1994)ப்படி அமைக்கப்படுகிறது. இச்சட்டத்தின்படி மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், அஸ்ஸாம், இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப், ஜம்மு காஷ்மீர் போன்ற மாநிலங்களில் இந்த ஆணையம் அமைக்கப்பட்டது.

### 23.3.2 தமிழ்நாட்டில்

இந்தியாவில் மாநில மனித உரிமைகள் ஆணையத்தை அமைத்ததில் தமிழ்நாடு 5ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையத்தில் 1. உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி; 2. உயர்நீதிமன்ற நீதிபதி; 3. மாவட்ட நீதிமன்ற நீதிபதி; 4. மனித உரிமைகள் பற்றிய நடைமுறை அனுபவமுள்ள இருவர்; 5. மாநில அரசுச் செயலர் பதவிக்கு இணையான ஒருவர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.



மாநில ஆணையத்தின் தலைவரையும் உறுப்பினர்களையும் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட தெரிவுக்குழுவின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் நியமிக்கிறார். இவர்களது ஊதியமும் படிகளும் அரசாங்க ஆணையால் (G.O. Ms. No. 1465, Public (L&D) dated 20.12.1996) நிர்ணயிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையத்தில் 1. புலனாய்வுப் பகுதி; 2. தொழில் நுட்பப் பகுதி; 3. அறிவியல் பகுதி ஆகியவை உள்ளன.

### 23.3.3 செயல்படும் மாநிலங்கள் : 23

| வ எண். | மாநில ஆணையம் | நகரம் | அமைக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1. | அஸ்ஸாம் | கௌகாத்தி | 1996 |
| 2. | ஆந்திர பிரதேசம் | ஐதராபாத் | - |
| 3. | பீகார் | பாட்னா | 2000 |
| 4. | சதீஸ்கர் | ராய்பூர் | 2001 |
| 5. | குஜராத் | காந்தி நகர் | 2006 |
| 6. | கோவா | பனாஜே | - |
| 7. | அரியானா | சண்டிகர் | - |
| 8. | ஜம்மு-காஷ்மீர் | ஸ்ரீநகர் | - |
| 9. | கேரளா | திருவனந்தபுரம் | 1998 |
| 10. | கர்நாடகம் | பெங்களூர் | 2005 |
| 11. | மத்திய பிரதேசம் | போபால் | 1995 |

| | | | |
|---|---|---|---|
| 12. | மாகி | மும்பை | 2001 |
| 13. | மகாராட்டிரம் | மும்பை | 2001 |
| 14. | மணிப்பூர் | இம்பால் | - |
| 15. | ஒடிசா | புவனேஸ்வரம் | 2000 |
| 16. | பஞ்சாப் | சதிஸ்கர் | - |
| 17. | ராஜஸ்தான் | ஜெய்பூர் | 1999 |
| 18. | தமிழ்நாடு | சென்னை | 1997 |
| 19. | உத்திர பிரதேசம் | லக்னோ | 2002 |
| 20. | மேற்கு வங்காளம் | கொல்கத்தா | 1994 |
| 21. | ஜார்கண்டு | ராஞ்சி | - |
| 22. | சிக்கிம் | காங்டாக் | 2008 |
| 23. | உத்திரகாண்ட் | டேராடூன் | 2013 |

## 23.4 மத்தியப் புலனாய்வு ஆணையம்

(Central Vigilance Commission)

### 23.4.1 ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகள்

இந்தியாவில் ஊழல் (Corruption) காற்றைப் போல் அங்கு இங்கு எனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது! உலகம் முழுவதும் ஊழல் மனிதனின் உடன் பிறந்த குணமாக உள்ளது. சாணக்கிய கௌடில்யர் (Kautilya) போன்றவர்கள் ஊழலைப் பற்றி விரிவாக எழுதியுள்ளனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட இந்திய தண்டனைச் சட்டத் தொகுப்பு (Indian Penal Code, 1860) பொதுப்பணி ஊழல் பற்றியது. இந்தியா விடுதலை பெற்றபின் ஊழல் தடுப்புச் சட்டம் (Prevention of Corruption Act, 1947) நடைமுறைப்படுத்தப்பட்டது. பொதுப் பணி ஊழலைப் பற்றி விரிவாக ஆய்வு செய்த சந்தானம் குழு (Santhanam Committee) 1964 மார்ச் 31ஆம் தேதி சமர்ப்பித்த அறிக்கையில் ஊழலை ஒழிக்க 137 பரிந்துரைகளைச் செய்தது அதன்பின் மத்திய அரசால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பயனில்லை. ஊழல் ஒழிந்தபாடில்லை!



### 23.4.2 மத்திய ஆணையம்

மத்தியப் புலனாய்வு ஆணையம் சந்தானம் குழுவின் பரிந்துரையின்படி மத்திய அரசால் அமைக்கப்பட்ட அமைப் பாகும். 1964ஆம் ஆண்டு மத்திய அரசின் ஆட்சித் துறைத் தீர்மானத்தின் (Executive Resolution) மூலம் அமைக்கப்பட்டதே மத்தியப் புலனாய்வு ஆணையமாகும். 2003 செப்டம்பர் மாதம் நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தின்படி இந்த ஆணையத்துக்கு சட்ட அந்தஸ்து (Statutory Status) அளிக்கப்பட்டது. அரசாங்க பொதுப் பணிகளில் ஊழலை ஒழிப்பதற்காகத் தற்கால இந்திய வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட மகத்தான முயற்சிகளில் ஒன்று மத்தியப் புலனாய்வு ஆணையத்தைத் தோற்றுவித்ததாகும்.

### 23.4.3 ஆணையத்தின் அமைப்பு

மத்தியப் புலனாய்வு ஆணையத்தில் தலைவரும் இரண்டுக்கு மேற்படாத உறுப்பினர்களும் உள்ளனர். இவர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். பிரதமர் (தலைவர்), மத்திய உள்துறை அமைச்சர், மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைக் கொண்ட மூவர் தேர்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவரால் இவர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் 4 ஆண்டுகள் அல்லது 65 வயது நிறைவடையும்வரை பதவியில் இருக்கலாம். இடையில் இவர்கள் குடியரசுத் தலைவரால் விதிகளின்படி பதவி நீக்கம் செய்யப்படலாம். மத்தியப் புலனாய்வு ஆணையர்கள் பதவி ஓய்வு பெற்ற பின்னர் மத்திய மாநிலப் பணிகளில் எந்தப் பதவியையும் வகிக்கக் கூடாது. தற்போது இந்த ஆணையத்தில் மொத்தம் நூற்றுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் உள்ளனர். மத்தியப் புலனாய்வு ஆணையத்தின் தற்போதைய தலைவர் கே.வி. சௌதரி (2016).

### 23.4.4 ஊதியமும் சலுகைகளும்

மத்தியப் புலனாய்வு ஆணையத்தின் ஊதியம், ஊதியப் படிகள், சலுகைகள், பிற பணி சம்பந்தமான விதிகள் ஆகியவை மத்திய பொதுப்பணி ஆணையர்கள்(UPSC) பெறும் ஊதியத் துக்குச் சமமானவை. இவை ஆணையர்களின் பதவிக் காலத்தில் மாற்றப்படாமல் இருக்கும். அதாவது மத்திய புலனாய்வு ஆணையர் களுக்குப் பணிப் பாதுகாப்பு முற்றிலுமுண்டு.

### 23.4.5 பணிகளும் பொறுப்புகளும்

மத்தியப் புலனாய்வு ஆணையத்தின் **பணிகளும் பொறுப்புகளும்**: 1. பொதுப் பணியாளர் மீது கூறப்படும் ஊழல் புகார்களை விசாரித்தல். 2. ஊழல் புகார்கள் பற்றிய விசாரணையை முடுக்கி விட்டு முடித்தல். 3. புலனாய்வு முகமை அமைப்புகளிடமிருந்து அறிக்கைகளைப் பெற்று அவைகளின் ஊழல் ஒழிப்பு நடவடிக்கை களை மேற்பார்வையிட்டு நெறிப்படுத்தல். 4. மேல் நடவடிக்கை களுக்காக ஊழல் வழக்குகளைத் தன்வசம் எடுத்துக் கொள்ளல். 5. பொது நிர்வாகத்தில் நேர்மையை நிலை நாட்டுவதற்காக ஊழல் சம்பந்தப்பட்ட விதிகளையும், நடைமுறைகளையும் மறுசீராய்வு செய்தல். 6. ஆணையத்தின் நடவடிக்கைகளைப் பற்றிய ஆண்டு அறிக்கையை உள்துறை அமைச்சகத்திடம் சமர்ப்பித்தல்.

### 23.4.6 27 விதமான ஊழல்கள்!

மத்தியப் புலனாய்வு ஆணையம் **27 விதமான ஊழல்களைக்** கண்டறிந்து பட்டியலிட்டுள்ளது: 1. தரக்குறைவான வேலைகளை ஏற்றுக் கொள்வது. 2. பொதுப் பணத்தையும், பொருட்களையும் கையாடல் செய்தல். 3. கடமைகளைச் செய்ய கையூட்டு பெறுதல். 4. ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கடன் வாங்கல். 5. ஒப்பந்தக்காரர் களுக்கும் ஒப்பந்த நிறுவனங்களுக்கும் சலுகைகள் அளித்தல்.

6. பிரயாணப்படி, வீட்டு வாடகை போன்றவற்றைத் தவறாகப் பயன்படுத்தி ஆதாயம் பெறல். 7. வருவாய்க்கு அதிகமான சொத்துக் குவிப்பு. 8. முன் அனுமதியின்றி அசையா சொத்துக்களை வாங்குதல். 9. கவனக் குறைவால் அரசாங்கத்துக்கு இழப்பு ஏற்படுத்தல். 10. பதவியையும் அதிகாரங்களையும் முறை கேடாகப் பயன்படுத்தல்.

11. நியமனம், பதவியமர்த்தல், பணிமாற்றம், பதவி உயர்வு ஆகியவற்றுக்கு சட்ட விரோதமாக ஆதாயம் பெறல். 12. அரசு ஊழியர்களை சொந்த வேலைக்குப் பயன்படுத்தல். 13. வயது, பிறப்பு, சமூகம் போன்றவற்றுக்குப் போலிச் சான்றிதழ்கள் வழங்கல். 14. இரயில், விமானப் பயணங்களுக்கு இட ஒதுக்கீடு பெற முறைகேடான வழிகளைப் பின்பற்றல். 15. பண ஆணைகள், பதிவு செய்யப்பட்ட தபால்கள் போன்றவற்றை வழங்காதிருத்தல்.

16. புதிய தபால் தலைகளுக்குப் பதில் பயன்படுத்தப்பட்ட தபால் தலைகளைப் பயன்படுத்தல்! 17. இறக்குமதி ஏற்றுமதி உரிமங்கள் வழங்குவதில் முறைகேடுகள். 18. அரசாங்க ஊழியர்களின் உதவியுடன் இறக்குமதி மற்றும் அனுமதிக்கப்பட்ட பங்கு ஒதுக்கீட்டில் முறைகேடு செய்தல். 19. தொலைபேசி வழங்குவதில் முறைகேடு. 20. ஒழுக்கக் கயமை.



21. பரிசுப் பொருட்களைப் பெறல். 22. ஆதாயத்துக்காக வருமான வரி, சொத்து வரி போன்றவற்றைக் குறைத்து மதிப் பிடுதல். 23. இரு சக்கர வாகனங்கள், மகிழ்வுந்துகள் போன்ற வற்றுக்கு வழங்கப்படும் முன்பணத்தில் முறை கேடு செய்தல். 24. வீடிழந்தோருக்கு இழப்பீடு வழங்குவதில் காலதாமதம். 25. இடம் பெயர்ந்தோர் கோரிக்கைகளைத் தவறாகக் குறைத்து மதிப்பீடு செய்தல். 26. குடியிருப்பு நிலங்களை வாங்கல், விற்றல் பற்றிய தொடர்புகளில் ஏமாற்றுதல். 27. அரசுக் குடியிருப்புகளை முறைகேடாகப் பெறல்; வாடகைக்கு விடல். மத்தியப் புலனாய்வு ஆணையம் கண்டறிந்த ஊழல்கள் சில, கண்டறியாத ஊழல்கள் பல!

### 23.4.7 அதிகார எல்லை

மத்தியப் புலனாய்வு ஆணையத்தின் அதிகார எல்லை அகல் விரிவானது. மத்திய அரசின் அனைத்துப் பணியாளர்கள் மற்றும் பொதுத் துறை ஊழியர்கள் அனைவரும் இந்த ஆணையத்தின் அதிகார வட்டத்துக்குள் வருவார்கள். டெல்லி மாநகராட்சி மன்றமும், புது டெல்லி நகராட்சிக் குழுவும் இதன் அதிகார வரம்புக்குட் பட்டவை. துவக்கத்தில் **அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள்** (Gazetted Officers) மட்டுமே இந்த ஆணையத்தின் அதிகாரத்துக்கு உட்படுத்தப் பட்டனர். பின்னர் பிற அதிகாரிகளும் அலுவலர்களும் இதன் அதிகார எல்லைக்குள் கொண்டு வரப்பட்டனர்!

### 23.4.8 மதிப்பீடு

பொது நிர்வாகத்தின் அனைத்து நிலைகளிலும் ஊழல் புரையோடிப் போயிருக்கிறது. மத்தியப் புலனாய்வு ஆணையம் ஊழலை ஒழிப்பதற்கான **அமைப்பு ரீதியான ஏற்பாடாகும்**. செயல் சுதந்திரத்தோடு செயல்படும் இந்த ஆணையம் **ஆலோசனை அமைப்பாக மட்டுமே உள்ளது**. இருப்பினும் இந்த அமைப்பு ஊழல் ஒழிப்புக்கான **ஆற்றல் மிக்க கருவியாகும்**. இக்கருவியை மத்திய அரசு அரசியல் காரணங்களுக்காகத் தவறாகப் பயன்படுத்துவதாகப் பரவலாகப் புகார் எழுந்துள்ளது. அண்மைக் கால ஊழல் புகார்கள் மக்களைக் கோபம் கொள்ளச் செய்துள்ளன. இந்த ஆணையத்தை முழு சுதந்திர அமைப்பாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்

பட்டுள்ளன. மத்தியப் புலனாய்வு ஆணையம் அரசியல் அமைப்புச் சட்ட அமைப்பாகி விட்டால் இதன் செயல்திறன் பன்மடங்கு பெருகி விடும்.

## 23.5 மத்தியப் புலனாய்வுத் துறை
(Central Bureau of Investigation)

### 23.5.1 வரலாற்றுச் சிறப்பு

மத்தியப் புலனாய்வுத் துறை (CBI) மத்தியப் புலனாய்வு ஆணையத்துக்கு உதவி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப் பாகும். இந்த அமைப்பு வரலாற்றுச் சிறப்புடையது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஊழலை ஒழிப்பதற்காக காவல் துறை (Police)யில் சிறப்பு அமைப்பை ஏற்படுத்துவதற்கான தேவை உணரப்பட்டது. எனவே *1941*ஆம் ஆண்டு இந்திய அரசு ஆட்சித் துறை ஆணையின் மூலம் சிறப்புக் காவல் அமைப்பை (Special Police Establishment) ஏற்படுத்தியது. *5* ஆண்டுகளுக்குப் பின் ***(1946)*** இந்த அமைப்பு **இந்திய அரசாங்கத்தின் உள்துறையின் பகுதியாக்கப்பட்டது.** *1963*இல் மத்தியப் புலனாய்வு ஆணையத்தின் பகுதியாயிற்று!

### 23.5.2 பணிகளும் பொறுப்புகளும்

மத்தியப் புலனாய்வுத் துறையின் பிரதான பணிகள் மூன்று: 1. மத்தியப் புலனாய்வு ஆணையத்துக்குத் தோன்றாத் துணையாக இருத்தல். 2. ஊழல் தடுப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளல். 3. பொது நிர்வாகத்தில் நேர்மையை நிலை நாட்டல்.

மத்திய புலனாய்வுத் துறையின் பிற பணிகளாவன: 1. மத்திய அரசுப் பணியாளர்களுக்கு எதிரான ஊழல், கையூட்டு, முறைகேடான நடத்தை சம்பந்தப்பட்ட வழக்குகளைப் புலனாய்வு செய்தல். 2. நிதி மற்றும் பொருளாதாரச் சட்டங்களின் விதிமீறல்கள் பற்றி விசாரித்தல். 3. தேச, சர்வதேச தொடர்புடைய குற்றவாளிகள், குற்றவாளிக் கும்பல்கள் ஆகியவற்றின் குற்றத் தொடர்புகளைக் கண்காணித்துப் புலனாய்வுக்குட்படுத்தல். 4. ஊழல் எதிர்ப்பு அமைப்புகள், ஊழல் வழக்குகள் சம்பந்தப்பட்ட மாநில அமைப்புகள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல். 5. மாநில அரசுகளின் வேண்டுகோளுக்கிணங்க பொது முக்கியத்துவமிக்க ஊழல் வழக்குகளை புலன் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளல். 6. குற்றப் புள்ளி விவரங்களைத் தயாரித்தல்; ஊழல் குற்ற வழக்குகள் பற்றிய தகவல்களைக் கொடுத்தல்.



### 23.5.3 துறை அதிகாரிகள்

மத்தியப் புலனாய்வு ஆணையத்தின் வலக்கரமாகச் செயல் படுபவர் மத்தியப் புலனாய்வுத் துறையின் தலைவர் இயக்குநர் (Director). இவருக்குத் துணையாக இணை இயக்குநர். இவர்க ளன்றி கூட்டு இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், காவல்துறை மேற்பார்வை அதிகாரிகள், பிற காவல்துறை அலுவலர்கள் உள்ளனர். மத்திய புலனாய்வுத் துறையில் இவர்களன்றி 5000 ஊழியர்கள், 125 வழக்குமன்றத் தொடர்புடைய குற்ற ஆய்வுத் துறை அறிஞர்கள், 250 சட்ட அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர்.

மத்திய புலனாய்வு இயக்குநர் ரஞ்சித் சின்கா (Ranjit Sinha) பதவிக் காலம் முடிந்ததையடுத்து அனில் சின்கா (Anil Sinha) அப்பதவிப் பொறுப்பேற்றார் (*3* டிசம்பர் *2014*).

### 23.5.4 மத்திய புலனாய்வு நிறுவன இயக்குநர்கள் பட்டியல்
(CBI Directors)

| வரிசை எண். | பெயர் | பதவிக்காலம் |
|---|---|---|
| 1. | டி.பி. கோலி | 1963 - 1968 |
| 2. | எப்.வி. அருள் | 1968 - 1971 |
| 3. | டி. சென் | 1971 - 1977 |
| 4. | எஸ்.என். மதூர் | 1977 |
| 5. | சி.வி. நரசிம்மன் | 1977 |
| 6. | ஜான் லோபோ | 1977 - 1979 |
| 7. | ஆர்.டி. சிங் | 1979 - 1980 |
| 8. | ஜே.எஸ். பஜ்வா | 1980 - 1985 |
| 9. | எம்.ஜி. கத்ரே | 1985 - 1989 |
| 10. | எ.பி. முகர்ஜி | 1989 - 1990 |
| 11. | ஆர். சேகர் | 1990 |
| 12. | விஜய் கரன் | 1990 - 1992 |
| 13. | எஸ்.கே. தத்தா | 1992 - 1993 |

| | | |
|---|---|---|
| 14. | கே.வி.ஆர். ராவ் | 1993 - 1996 |
| 15. | ஜோகிந்தர் சிங் | 1996 - 1997 |
| 16. | ஆர்.சி. சர்மா | 1997 - 1998 |
| 17. | டி.ஆர். கார்த்திகேயன் | 1998 |
| 18. | டி.என். மிஸ்ரா | 1998 - 1999 |
| 19. | ஆர்.கே. ராகவன் | 1999 - 2001 |
| 20. | பி.சி. சர்மா | 2001 - 2003 |
| 21. | யு.எஸ். மிஸ்ரா | 2003 - 2005 |
| 22. | விஜய் சங்கர் திவாரி | 2005 - 2008 |
| 23. | அஸ்வனிகுமார் | 2008 - 2010 |
| 24. | ராஸ் பிரசாத் | 2010 - 2012 |
| 25. | ரஞ்ஜித் சின்கா | 2012 - 2014 |
| 26. | அனில் சின்கா | 2014 |
| 27. | ராகேஷ் அஸ்தானா | 2016- |

மத்திய புலனாய்வு நிறுவனம் தகவல் அறியும் சட்ட (Right to Information Act)த்துக்குச் கட்டுப்பட்டதன்று. இந்த விலக்கு இந்நிறுவனத்துக்கு தேசிய பாதுகாப்பு கருதி கொடுக்கப்பட்டுள்ளது.

## 23.5.4. ஆராய்ச்சி மற்றும் ஆய்வுப் பிரிவு (Research and Analysis Wing (RAW))

### தோற்றம்

ஆராய்ச்சி மற்றும் ஆய்வுப் பிரிவு 1962ஆம் ஆண்டு சீனா - இந்தியா போருக்குப்பின் தோற்றுவிக்கப்பட்டது. அதன்பின் நடைபெற்ற இந்தியா-பாகிஸ்தான் போர் (1965) வளமைமிக்க, சுதந்திரமான வெளிநாட்டுப் புலனாய்வுத் தகவல்களை சேகரிக்கக்கூடிய அமைப்புகள் இன்றியமையாமையை அடிக்கோடிட்டுக் காட்டியது. அதன் விளைவாக 1968 செப்டம்பர் மாதம் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதல் இயக்குநர் ராமேஷ்வர் நாத் கௌ (Rameshwar Nath Kao).



### நோக்கங்கள்

ஆராய்ச்சி மற்றும் ஆய்வுப் பிரிவின் பிரதான நோக்கங்களாவன:
1. இந்தியப் பாதுகாப்புடன் சம்மந்தப்பட்ட நாடுகளின் அரசியல், ராணுவ, பொருளாதார, விஞ்ஞான வளர்ச்சிகளைத் தொடர்ந்து கண்காணித்தல். 2. வெளிநாடு வாழ் இந்தியர்களின் உதவியோடு இந்தியாவுக்கு ஆதரவாக, சாதகமாக சர்வதேச பொதுக்கருத்தை உருவாக்கல். 3. இந்திய தேசிய நலன்கள் பாதுகாப்பு தகுதி இரகசியமான நடவடிக்கை களை மேற்கொள்ளல். 4. இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்தல்.

### நடவடிக்கைகள்

ஆராய்ச்சி மற்றும் ஆய்வுப் பிரிவு எடுக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளும் முறைகளும் பரம ரகசியமானவை. மத்திய புலனாய்வுத் துறையைப் போன்று இதன் நடவடிக்கைகள் வெளிப்படையானவை யல்ல. பொதுவாக இப்பிரிவு அண்டை மற்றும் அயல் நாடுகளிலிருந்து ராணுவ, பொருளாதார, அரசியல், விஞ்ஞான புலனாய்வு முக்கியத்துவ முடைய தகவல்களை சேகரிக்கின்றது. போதைப் பொருள், இராணுவ தளவாடங்கள் போன்றவற்றைக் கடத்தும் பயங்கரவாத அமைப்புகளைக் கண்காணிக்கிறது. இப்பிரிவு பிற நாடுகளின் இரகசிய சேவை நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளும். இந்த பிரிவு தன் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக எந்த முறையையும் கையாளத் தயங்காது!

### 'தவிர்க்கமுடியாத தீமை'

ஆராய்ச்சி மற்றும் ஆய்வுப் பிரிவு பாகிஸ்தான், சீனா, வங்கதேசம், சிக்கிம், மொரீஷியஸ், அயர்லாந்து, ஸ்ரீலங்கா, போன்ற நாடுகளில் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பிறநாடுகள் இதன் தேவையைக் கேட்டுப் பெறுவதும் உண்டு. இந்த அமைப்பு மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பின்மையால் பலத்த சர்ச்சைக்குள்ளாகிறது! இதன் நடவடிக்கைகள் பற்றி நாடாளுமன்றத்திலும் விவாதிக்க முடியாது! இவ்வமைப்புக்கு எதிராகக் கடுமையான குற்றச்சாட்டுகள் கூறப் பட்டாலும் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுப் பிரிவு 'தவிர்க்க முடியாத தீமை'யாக உள்ளது.

## 23.6 லோக்பால், லோகாயுக்தாக்கள்
(Lokpal and Lokayuktas)

### 23.6.1 லோக்பால்

*குடிமக்களின் குறைகள்*

மக்களின் சார்பாக உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் அமைப்பின் கீழ் மக்கள் ஊழல் முட்புதர்களுக்குள் சிக்கித் தவித்தனர். ஊழலுக்கு எதிரான சட்டங்களும், அமைப்புகளும், நடவடிக்கைகளும் அதிகரிக்க அதிகரிக்க ஊழலும் கட்டுக்கு அடங்காமல் பெருகிற்று! இந்த விசித்திர விபரீதத்துக்குப் பலியானோர் பொது மக்களேயாவர். எனவே பாதிக்கப்பட்ட பொது மக்கள் கண்கள் கட்டப்பட்டு ஊழல் காட்டுக்குள் தள்ளப்பட்டவர்களாயினர்! தங்களது குறைகளைக் களைவதற்கான வழி தேடினர். குரலற்ற இவர்களுக்குக் குரல் கொடுப்பவர்களுக்காக ஏங்கித் தவித்தனர்!

*குறை தீர்த்தல்*

ஊழலின் உக்கிரத்தையும், மக்களின் குறைகளையும் நன்கு அறிந்த இந்திய அரசியல் அமைப்புச் சட்ட கர்த்தாக்கள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகளைச் சேர்த்தனர். சுதந்திரமாகச் செயல்படும் உச்சநீதிமன்றத்தை அமைத்தனர். மக்கள் பிரதிநிதிகளுக்குத் தொடர்ந்து பொறுப்பாகக் கூடிய அரசாங்க முறையை ஏற்படுத்தினர். எனினும் இவை யாவும் பொது மக்களின் குறைபாடுகளைப் போக்கப் பயன்படவில்லை. ஏனெனில் இந்த அமைப்புகள் சாதாரண மக்களின் அடிப்படை அன்றாடக் குறைகளைக் களைவதற்கு ஏற்றவையாக இல்லை. இவர்கள் துடுக்குத்தனமான கர்வமிக்க அதிகாரிகளின் அடக்கு முறைக்கு ஆளாகினர். அடித்தட்டு மக்களின் குறைகள் கேட்கப் படாமல் இருந்தன!

*மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் / குறைதீர்ப்பு ஆணையர்*

பொது மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. *1966* ஏப்ரல் மாதத் துவக்கத்தில் **பொதுக் குறை தீர்ப்பு ஆணையர்** (Commissioner for Public Grievances) நியமிக்கப்பட்டார். இவரது பணிகள் இரண்டு: 1. குடிமக்களின் குறைகளைப் போக்குவதற்காக உள்ள அரசாங்க அமைப்புகளின் நடவடிக்கைகளை முறைப்படுத்தல். 2. இவற்றுக்குத் திறமை மிக்க தலைமையைக் கொடுத்தல். அமைச்சகங்களில் குறை கேட்கும் அறைகள் (Complaint Cells) அமைக்கப்பட்டன.



*செயல் சுதந்திரம்*

குறை தீர்ப்பு ஆணையருக்கு செயல் சுதந்திரம் வழங்கப் பட்டது. புலனாய்வு அதிகாரம் அளிக்கப்பட்டது. பணிப் பாது காப்பும் கொடுக்கப்பட்டது. எனினும் இவரால் வாக்குறுதிகளைக் கொடுக்க முடிந்ததேயன்றிப் பொது மக்களின் குறைகளைத் தீர்க்க முடியவில்லை! இதன் விளைவாக தனியாக ஒரு **பொதுக் குறைபாட்டு இயக்குநரகம்** (Directorate of Public Grievances) தோற்றுவிக்கப்பட்டது. இம்முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிந்தன.

*நிர்வாக சீர்திருத்தங்கள் ஆணையம் பரிந்துரை*

*1966*ஆம் ஆண்டு **நிர்வாக சீர்திருத்தங்கள் ஆணையம்** (Administrative Reforms Commission) அமைக்கப்பட்டது. இதன் நோக்கம் குடிமக்களின் குறைகளைத் தீர்ப்பதாகும். இந்த ஆணையம் 1966 அக்டோபர் மாதம் இடைக்கால அறிக்கை (Interim Report)யை சமர்ப்பித்தது. இந்த அறிக்கையில் மத்திய அரசின் அமைச்சகங்கள் மற்றும் செயலகங்கள் பற்றிய குறைகளைக் கேட்பதற்காக **லோக்பால், லோகாயுக்தாவைக்** கொண்ட இரண்டடுக்கு அமைப்பு முறையைப் பரிந்துரைத்தது. **முதன் முறையாக இந்த அறிக்கையில் தான் லோக்பால், லோகாயுக்தா அமைப்புகள் பற்றிக் குறிப்பிடப்பட்டது.** இந்த இரு அமைப்புகளின் அதிகாரங்கள், பணிகள், பொறுப்புகள், நடவடிக்கைகள் பற்றி விரிவாக விளக்கப் பட்டிருந்தன.

நிர்வாக சீர்திருத்தங்கள் ஆணையத்தின் பரிந்துரைப்படி மத்தியில் ஒரு லோகாயுக்தாவும், ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு லோகாயுக்தாவும் இருக்க வேண்டும். இவர்கள் அரசுப் பணியாளர் களுக்கு எதிராக எழுப்பப்படும் குறைகளைத் தீர்க்க வேண்டும். அது மட்டுமல்ல. இந்த அமைப்பு ஆம்புட்ஸ்மன் (Ombudsman) அமைப்பு போன்று இருக்க வேண்டும் என்று சிபாரிசு செய்தது.

*ஆம்புட்ஸ்மன் அமைப்பு*

ஆம்புட்ஸ்மன் என்ற சொல் சுவீடன் மொழியில் உள்ள 'ஆம்புட்' என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். **ஆம்புட் என்றால் ஒருவரின் பிரதிநிதி** என்று பொருள். **ஆம்புட்ஸ்மன் என்றால் நிர்வாக முறைகேட்டிலிருந்து குடிமக்களைக் காப்பாற்றும் அதிகாரி** என்று பொருள். இந்திய லோக்பால் இந்த ஆம்புட்ஸ்மனை **முன்னுதாரண** மாகக் கொண்டு அமைக்கப்பட்ட அமைப்பாகும்.

### காரணங்கள்

லோக்பால் அமைக்கப்படுவதற்கான காரணங்கள் யாவை? 1. அரசாங்க நடவடிக்கைகளின் அதீதப் பெருக்கம். 2. அரசாங்க அதிகாரிகளிடம் உள்ள விருப்புரிமை அதிகாரங்கள் (Discretionary Powers). 3. ஒப்படைக்கப்படும் சட்டங்கள் (Delegated Legislation). 4. அதிகாரிகளிடமிருந்து குடிமக்களின் எதிர்பார்ப்புகள். 5. ஆட்சித் துறையை சட்ட மன்றத் துறையால் கட்டுப்படுத்த முடியாமை. 6. நீதிமன்றங்களால் ஏற்படும் காலதாமதம், பணச் செலவு. இவற்றின் விளைவாகக் குடிமக்களிடம் ஆட்சி முறையின்மீது நம்பகத்தன்மை வெகுவாகக் குறைந்து விடுகிறது. அரசாலும், அதிகார வர்க்கத்தாலும், அரசியல்வாதிகளாலும் குறை தீர்க்க முடியாது என்ற எண்ணம் குடிமக்களிடையே மேலோங்கி உள்ளது. எனவே செயல் சுதந்திரமிக்க குறை தீர்ப்பு அமைப்புக் கான தேவை இன்றியமையாதது.

### லோக்பால் மசோதா

நாடாளுமன்ற மக்களவையில் முதன் முறையாக 1968ஆம் ஆண்டில் லோக்பால் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டு அடுத்த ஆண்டே (1969) நிறைவேற்றப்பட்டது! இந்த மசோதா மாநிலங்க ளவையில் விவாதிக்கப்பட்ட போது மக்களவை கலைக்கப்பட்டு விட்டது! அதன் பின் இந்த மசோதா பலமுறை (*1971, 1977, 1985, 1989, 1996, 1998, 2001, 2004, 2011*) அறிமுகப் படுத்தப்பட்டு நிறைவேற்ற முடியாமல் போயிற்று. இறுதியாக காலத்தின் கட்டாயத்தால் 2014இல் இம்மசோதா (Lokpal and Lokayuktas Bill, 2013) சட்டமாக்கப்பட்டது.

### லோக்பாலின் நோக்கம்

லோக்பால் மற்றும் லோகாயுக்தாக்கள் சட்டப்படி லோக்பால் நியமிக்கப்படுவதற்கு வழி வகுக்கப்பட்டது. இதன் நோக்கங்கள் இரண்டு: 1. பொதுப் பணிகளில் ஊழலை ஒழிப்பது. 2. பிரதமர் உள்ளிட்ட பொதுப்பணியாளர்களைப் பொறுப்பேற்கச் செய்தல்.

### அமைப்பு

லோக்பால் அமைப்பில் தலைவர் (Chairman) மற்றும் 8 உறுப்பினர்கள் இடம் பெறுவர். உறுப்பினர்களில் 50 சதவிகித உறுப்பினர்கள் பட்டியல் வகுப்பார், சிறுபான்மையினர், பெண்கள் பிரதிநிதிகளாவர். தலைவரையும், உறுப்பினர்களையும் தேர்வுக் குழு (Selection Committee) தெரிவு செய்யும். இத்தேர்வுக் குழுவில் 1. பிரதமர்; 2. மக்களவைத்தலைவர்; 3. மக்களவை எதிர்க்கட்சித் தலைவர்; 4. உச்சநீதிமன்ற நீதிபதி; 5. குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் சட்ட வல்லுநர் ஆகியோர் இடம் பெறுவர்.



### அதிகார எல்லை

லோக்பாலின் அதிகார எல்லைக்குள் 1. அனைத்துப் பொதுப் பணியாளர்கள்; 2. வெளிநாட்டு நன்கொடைகள் பெறும் அரசுசாரா அமைப்புகள் (NGOs) ஆகியவை அடங்கும். லோக்பால் சட்டம் மாநிலங்களுக்கு அனுப்பப்படும். லோக்பாலை முன்மாதிரியாகக் கொண்டு மாநிலங்கள் லோகாயுக்தாக்களை அமைக்க வேண்டும். இந்த அமைப்பை மாநிலச் சட்டத்தின் மூலம் லோக்பால் அமைக்கப் பட்ட 365 நாட்களுக்குள் தோற்றுவிக்க வேண்டும்.

### பணிகள்

லோக்பாலின் பணிகளும் பொறுப்புகளும்: 1. இந்திய புலனாய்வுக் குழு (CBI) உள்ளிட்ட மத்தியப் புலனாய்வு அமைப்புகளை மேற்பார்வையிட்டு நெறிப்படுத்தல். 2. பிரதமரைத் தலைவராகக் கொண்ட உயர்மட்டக்குழு மத்தியப் புலனாய்வுக் குழு இயக்குநரை நியமிப்பதற்கான பரிந்துரை செய்யும். இத்தேர்வுக் குழுவில் பிரதமர், மக்களவை எதிர்க் கட்சித் தலைவர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் இடம் பெறுவர்.

பிரதமர், மத்திய அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள், லோக்பால் அதிகாரக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளனர்!

தற்போது சட்ட அமைச்சகத்தின் கீழ் உள்ள குற்ற வழக்கு இயக்குநரகம் (Directorate of Prosecution) மத்தியப் புலனாய்வு குழு இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரப்படும். மத்திய புலனாய்வு ஆணையத்தின் பரிந்துரையின்பேரில் இயக்குநரகத் தலைவர் நியமிக்கப்படுவார். இயக்குநரகத் தலைவரும், புலனாய்வு ஆணையரும் இரண்டாண்டு காலம் பதவியிலிருப்பார்கள்.

மத்தியப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் லோக்பாலால் பணி மாற்றம் செய்யப்படலாம்.

பூர்வாங்கப் புலனாய்வு, விசாரணை, வழக்கு விசாரித்தல் பற்றிய விதிகள் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும். பூர்வாங்க விசாரணையில் பொதுப்பணி அதிகாரிகள் நேரில் ஆஜராக வேண்டிய அவசியமில்லை.

பொதுப்பணியாளர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கான அதிகாரம் லோக்பாலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மத்தியப் புலனாய்வுத் துறை லோக்பாலின் ஒப்புதலுடன் வழக்குரைஞர் குழு (Panel of Advocates)வை அமைக்கலாம். இதற்காக அரசாங்க வழக்குரைஞர்களைச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயமில்லை.

**லோக்பால் அமைப்பு**

**லோக்பால்** அமைப்பு பொது வாழ்க்கையில் நேர்மையை நிலை நாட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதே போன்று நீதி நிர்வாகம் ஏழை பணக்காரர் என்ற வேறுபாடின்றி வழங்கப்படும்; அடித்தட்டு மக்களின் குரல் கேட்கப்படும்; சட்டத்தின் ஆட்சி அர்த்தமுள்ள தாகும்; அரசாங்கம் பாரபட்சமின்றி நடைபெறும்; தவறு செய்யும் உயர்மட்ட அரசியல் தலைவர்களும், அரசாங்க அதிகாரிகளும், பொதுப் பணியாளர்களும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது; பொது மக்களுக்கு நீதியின் மீது நம்பிக்கை ஏற்படும் என்றெல்லாம் நம்பப்படுகிறது. லோக்பாலின் வெற்றி அதன் செயல்பாட்டைப் பொறுத்தே உள்ளது. சாப்பாட்டின் சுவை சாப்பிட்டுப் பார்த்தால்தானே தெரியும்?

## 23.6.2 லோகாயுக்தாக்கள் (Lokayuktas)

*மாநில அமைப்புகள்*

லோக்பால் மற்றும் லோகாயுக்தாக்கள் சட்டம் (2013) மாநிலங்களில் லோக்பால் போன்று **லோகாயுக்தா** அமைக்கப்பட வேண்டியதற்கான வழிகாட்டியுள்ளது. இந்தியாவில் லோகாயுக்தா அமைப்பு புதிதல்ல. **மராட்டிய மாநிலம்தான் முதன் முதலில் லோகாயுக்தா அமைப்பைத் தோற்றுவித்தது** (1971). அதன் பின் ஆந்திரா, அஸ்ஸாம், பீகார், சத்தீஷ்கர், டெல்லி, கோவா, குஜராத், அரியானா, இமாசலப் பிரதேசம், ஜார்கண்டு, கர்நாடகா, கேரளா, மத்தியப் பிரதேசம், ஒரிசா, பஞ்சாப், இராஜஸ்தான், உத்தரகாண்டு, உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இந்த அமைப்பை ஏற்படுத்தின. ஆனால் **ஜம்மு - காஷ்மீர், அருணாசல பிரதேசம், மேகாலயா, மணிப்பூர், மிசோரம், நாகலாந்து, சிக்கிம், தமிழ்நாடு, திரிபுரா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் லோகாயுக்தா அமைக்கப்படவில்லை!**



*அகில இந்திய மாநாடு*

2012 நவம்பர் மாதம் நடைபெற்ற **11**ஆவது அகில இந்திய லோகாயுக்தா மாநாடு மாநிலங்களில் லோகாயுக்தாக்கள் அமைக்கப் பட வேண்டியதன் இன்றியமையாமையை அடிக் கோடிட்டுக் காட்டியது. இம்மாநாடு கீழ்க்கண்ட பரிந்துரைகளை மத்திய அரசுக்கு அனுப்பியது: **1.** லோகாயுக்தா அனைத்து ஊழல் புகார்களையும் பரிசீலிக்கும் முக்கிய மைய அமைப்பாக (Nodal Agency) இருக்க வேண்டும். **2.** லோகாயுக்தாவின் அதிகார வரம்புக்குள் அனைத்து மாநிலப் பொதுப் பணியாளர்களும், அமைப்புகளும் கொண்டு வரப்பட வேண்டும். **3.** இதே போன்று அதிகார வர்க்கமும் இதன் அதிகாரத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும். **4.** புகாருக்குரியவர்களின் வீடுகள், அலுவலகங்கள் ஆகியவற்றைச் சோதனையிடுவதற்கும், சந்தேகத்துக்குரிய ஆவணங்களையும் பொருட்களையும் கைப்பற்றுவதற்கும் அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். **5.** லோகாயுக்தாவுக்கு நிர்வாக, நிதி சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும். **6.** அரசாங்க நிதி உதவி பெறும் அனைத்து அரசு சாரா அமைப்புகளும் லோகாயுக்தாவின் அதிகார வரம்புக்குள் கொண்டு வரப்பட வேண்டும்.

## 23.6.3 லோக்பாலும் லோகாயுக்தாவும் : ஒப்பீடு

லோக்பால் மக்களின் சட்டப் பாதுகாவலர். லோகாயுக்தா மாநிலத்தில் ஊழலுக்கெதிரான அமைப்பு. குறிப்பாக இந்த அமைப்பு மாநிலத்திலுள்ள ஆட்சிப் பொறுப்பிலுள்ள அரசியல்வாதிகள் மற்றும் அதிகார வர்க்கத்தினர் ஆகியோர் மீது கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும். லோக்பாலுக்கு வீடுகள், அலுவலகங்களைச் சோதனையிடும் அதிகாரம் இல்லை. ஆனால் லோகாயுக்தாவுக்குச் சோதனையிடும் அதிகாரம் உள்ளது! எனினும் இந்த இரு அமைப்புகளுக்கும் தண்டிக்கும் அதிகாரம் இல்லை.

## 23.7 தீர்ப்பாயங்கள் (Tribunals)

**நோக்கம்**

அரசாங்கப் பணியாளர்கள் ஆயிரக்கணக்கில் உள்ளனர். இவர்களது பிரச்னைகளும் பலதரப்பட்டவை. இவர்களுக்கும் அரசுக்கும் பணி சம்பந்தமான தகராறுகள் தவிர்க்க முடியாதவை. இவற்றை நீதிமன்றங்கள் மூலம் தீர்த்துக் கொள்வது நடைமுறை சாத்தியமன்று. நீதிமன்ற விதிமுறைகள், கால தாமதம், செலவு

ஆகியவற்றைத் தாங்கும் நிலையில் அரசுப் பணியாளர்கள் இல்லை! எனவே இவர்களது குறைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு மாற்று முறை தேவைப்பட்டது. இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்டவையே தீர்ப்பாயங்கள்.

**மூவகைத் தீர்ப்பாயங்கள்**

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த போது (1950) அதில் தீர்ப்பாயங்கள் இடம் பெறவில்லை! பதினாறு ஆண்டுகளுக்குப் பின்னர் 1976ஆம் ஆண்டு செய்யப் பட்ட சட்ட திருத்தத்தின் மூலம் (Part XIV-A) தீர்ப்பாயங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவை **நிர்வாகத் தீர்ப்பாயங்கள்** (Administrative Tribunals) என்று அழைக்கப்படுகின்றன (சரத்து 323A). நிர்வாகத் தீர்ப்பாயங்கள் **மூன்று வகைப்படும்**: 1. **மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம்** (Central Administrative Tribunal - CAT). 2. **மாநில நிர்வாகத் தீர்ப்பாயங்கள்** (State Administrative Tribunals). 3. **பிற தீர்ப்பாயங்கள்** (Tribunals for other Matters, **சரத்து** 323B). மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் 1985இல் டெல்லியில் தோற்றுவிக்கப் பட்டது. இதன் கிளைகள் பல மாநிலங்களில் உள்ளன. மதராஸ் கிளை தமிழ்நாட்டுக்கும் புதுவைக்கும் பொது.

## 23.7.1 மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம்

*அமைப்பு*

மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் பல உறுப்பினர் அமைப்பாகும். இதில் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள் உள்ளனர். தற்போது தலைவர் (Chairman), 16 துணைத் தலைவர்கள் (Vice-Chairman) மற்றும் 46 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். இவர்களது பதவிக் காலம் 5 ஆண்டுகள் அல்லது 62 வயது நிறைவடையும்வரை. இவர்கள் பதவி ஓய்வுக்குப் பின் மீண்டும் பதவி வகிக்க முடியாது. இந்த விதி இவர்களது செயல் சுதந்திரத்தையும் நடுநிலை தவறாமையையும் உறுதி செய்வதற்காகச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த ஆணையத் தலைவரின் மாத ஊதியம் ரூ. 30,000. உறுப்பினர்களின் மாத ஊதியம் ரூ. 26,000.

*அதிகார எல்லை*

மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் அதிகார **எல்லைக்குள்** வருவோர்: 1. இந்திய அரசுப் பணியாளர்கள்; 2. மத்திய அரசுப் பணியாளர்கள்; 3. மத்திய அரசாங்கப் பதவிகளில் இருப்போர்; 4. இராணுவ சிவில் பணியாளர்கள்.



*பணிகள்*

இந்த ஆணையத்தின் பிரதான பணிகள் இரண்டு: 1. பணி நியமனம்; 2. பணிகள் சம்பந்தப்பட்ட அலுவல்கள். இதற்காக இந்தியாவின் பல நகரங்களில் இதன் கிளைகள் உள்ளன. ஒவ்வொரு மாநிலத் தலைநகரிலும் இதன் கிளை இருக்க வேண்டும் என்பதே இலக்காகும். ஒவ்வொரு கிளையிலும் ஒரு தலைவரும், இவருக்குக் குறையாத உறுப்பினர்களும் இருப்பார்கள்.

*செயல்பாடு*

மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் முறையான நீதிமன்றத்துக்கு மாற்று முறையாகச் செயல்படுகிறது. அரசுப் பொதுப் பணியாளர்களின் பணி சம்பந்தப்பட்ட சச்சரவுகளை / தகராறுகளை விரைவாகவும் செலவு அதிகமின்றியும் தீர்த்து வைக்கிறது. இதன் நடைமுறை விதிகள் மிகவும் எளிதானவை, எளிதில் புரிந்து கொள்ளக் கூடியவை. **இயற்கை நீதி** (Natural Justice)யே இந்த ஆணையத்தின் குறிக்கோள்.

பாதிக்கப்பட்ட எந்த மத்திய அரசுப் பணியாளரும் மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தை அணுகித் தீர்வு காணலாம். நேரில் ஆஜராகி குறைகளை எடுத்துரைக்கலாம். செலவின்றி விரைவில் தீர்வு காணலாம். இவ்வாறு ஆயிரக்கணக்கான பணியாளர்கள் தீர்வு கண்டுள்ளனர். மாற்று நீதிமன்ற முறை, விரைவில் செலவின்றித் தீர்ப்பு ஆகிய இரண்டு அளவுகோல்களைக் கொண்டு மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தை மதிப்பீடு செய்தால் இதன் பணி பாராட்டுக்குரியதாகும்.

*உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள்*

உச்ச நீதிமன்றம் 1997 மார்ச் மாதம் அளித்த தீர்ப்பு வரலாற்றுச் சிறப்புடையது. இத்தீர்ப்பு வெளிநாட்டு அந்நியச் செலாவணி, வரி ஏய்ப்புகள் போன்றவை பற்றியவை. இத் தீர்ப்பில் நிர்வாகத் தீர்ப்பாயங்கள் வல்லுநர்களைக் கொண்ட அமைப்பு, எனவே இவற்றின் செயல்பாடுகளை மத்திய மாநில சட்ட அமைச்சங்களைச் சேர்ந்த சட்ட நிபுணர்களைக் கொண்டே மேற்பார்வையிட முடியும் என்று குறிப்பிட்டது.

உச்சநீதிமன்றம் 2006 டிசம்பர் 5ஆம் தேதி அளித்த தீர்ப்பு அரசியல் ஊழல் பற்றியது. இந்த அதிரடித் தீர்ப்பில் இதுவரை பின்பற்றப்பட்டு வந்த குற்றவியல் சட்டத் தொகுப்பின் (Criminal Procedure Code) 197ஆவது பிரிவு செல்லாது என்றும், முதலமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் மீது அரசாங்கத்தின் முன் அனுமதி யின்றி வழக்கு தொடரலாம் என்றும் குறிப்பிடப்பட்டது. இத்தீர்ப்பு மத்திய தீர்ப்பாயத்தின் கரங்களைப் பன்மடங்கு பலப்படுத்தி விட்டது. இதுவரை அரசியல்வாதிகள் சட்டப் பாதுகாப்புடன் சட்டப் பிடியிலிருந்து தப்பித்து வந்தனர். இனி குற்றச் செயல் புரிந்த அரசியல்வாதிகள் தப்ப முடியாது.

### 23.7.2 மாநில நிர்வாகத் தீர்ப்பாயங்கள்
(State Administrative Tribunals SATs)

*அமைப்பு*

மாநில நிர்வாகத் தீர்ப்பாயங்கள், நிர்வாக தீர்ப்பாயங்கள் சட்டம், 1985 (Administrative Tribunals Act, 1985) குறிப்பிட்டுள்ளபடி துவக்கப்பட்டன. மாநில அரசாங்கங்களின் அனுமதியைப் பெற்ற பின்னரே இந்த ஆணையங்கள் துவக்கப்பட வேண்டும். மாநில தீர்ப்பாயத்தின் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள் ஆளுநரைக் கலந்தாலோசித்த பின் குடியரசுத் தலைவரால் நியமிக்கப் படுகின்றனர்.

*பணிகள்*

மாநில நிர்வாகத் தீர்ப்பாயங்களின் பணிகளும் மத்திய தீர்ப்பாயத்தின் பணிகளைப் போன்றவை. இவை மாநில அரசுப் பணியாளர்களின் நியமனம் மற்றும் பணி சம்பந்தப்பட்ட விதிகளைப் பற்றியவை. இத்தீர்ப்பாயங்கள் தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரா, இமாச்சல் பிரதேசம், மேற்கு வங்காளம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

*கூட்டு நிர்வாகத் தீர்ப்பாயங்கள்*

1985 தீர்ப்பாயங்கள் சட்டத்தில் கூட்டு நிர்வாகத் தீர்ப்பாயங்கள் (Joint Administrative Tribunals) தோற்றுவிக்கப் படுவதற்கான வழி வகுக்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்பாயம் இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட மாநிலங்களுக்குப் பொதுவாக செயல்படும். இவற்றின் பணிகளில் வேறுபாடில்லை.



### 23.7.3 பிற தீர்ப்பாயங்கள் (Tribunals for Other Matters)

அரசியல் அமைப்புச் சட்டத்தில் இரண்டு சரத்துகள் இத்தீர்ப்பாயங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. சரத்து 323அ பொதுப் பணிகள் பற்றிய தீர்ப்பாயத்தைப் பற்றியது. 323ஆ பிற பணிகள் குறித்தது. பிற பணிகள் பற்றிய தீர்ப்பாயம் பின்வரும் பொருட்கள் சம்பந்தப்பட்ட பணித் தகராறுகளைத் தீர்த்து வைக்கும்: 1. வரி சம்பந்தப்பட்டவை. 2. அந்நியச் செலாவணி. 3. இறக்குமதி, ஏற்றுமதி. 4. தொழில்கள், தொழிலாளர்கள். 5. நிலச் சீர்திருத்தங்கள். 6. நகர் சொத்து வரம்பு. 7. மத்திய மாநில சட்டமன்றத் தேர்தல்கள். 8. உணவுப் பொருட்கள். 9. வாடகை. 10. குடியிருப்போர் உரிமைகள்.

பிற தீர்ப்பாயங்களின் தீர்ப்புகள் இறுதியானவையல்ல! இத்தீர்ப்புகளை எதிர்த்து உயர்நீதிமன்றங்களிலும் உச்சநீதி மன்றத் திலும் வழக்கு தொடரலாம். எனவே இத்தகையத் தீர்ப்பாயங்களின் ஆணைகளுக்கு நீதிமன்றத் தீர்வுகள் உண்டு.

## 23.8 இந்தியச் சட்ட ஆணையம்
(Law Commission of India)

### 23.8.1 மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து சட்டச் சீர்திருத்தத்துக் காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1833 பட்டயச் சட்டம் (Charter Act of 1833) படி மெக்காலே ஆணையம் (Lord Macaulay Commission) அமைக்கப்பட்டது. பிறகு மூன்று ஆணையங்கள் அமைக்கப்பட்டன (1853, 1861, 1879). இந்த 4 ஆணையங்களின் விளைவாக இந்திய சிவில் சட்ட விதிமுறை (Indian Code of Civil Procedure), இந்திய ஒப்பந்தச் சட்டம் (Indian Contract Act), இந்தியச் சான்றுச் சட்டம் (Indian Evidence Act), சொத்து மாற்றுச் சட்டம் (Transfer of Property Act) போன்ற சட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

### 23.8.2 சுதந்திர இந்தியச் சட்ட ஆணையங்கள்

இந்தியா விடுதலை பெற்ற பின்னர் பன்முக சமுதாயத்தின் ஜனநாயக சட்டத் தேவைகளை மனதில் கொண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகளும், வழிகாட்டு விதிகளும் சேர்க்கப்பட்டன. சட்டச் சீர்திருத்தத்துக்குப் புத்துணர்ச்சி